Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 8, 2022

திங்கட்கிழமை ஓகஸ்ட் 08, 2022 | ஒளி: 08 கதிர்: 070 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இன்று யோசனை



சர்வகட்சி அரசாங்கத்துக்காக அரசியல் கட்சிகள் பலவற்றுடன் கடந்த சில நாள்களாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில், தயாரிக்கப்பட்ட யோசனை, இன்று (08) கையளிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளின் தலைவர்கள்

தொடர்ச்சி P2

### சீன உளவு கப்பல் விவகாரம்:

# ஒத்திவைக்க சீனாவிடம் கோரிக்கை

சீனாவின் விண்வெளி, செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான ‘யுவான் வாங் 5’ இன் விஜயத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கம், சீன அரசாங்கத்திடம் கோரியுள்ளதென மற்றுமொரு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு அரசாங்கங்களுக்கிடையில் “மேலும் ஆலோசனைகள்” மேற்கொள்ளப்படும் வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு கப்பல் விஜயம் செய்வதை ஒத்திவைக்குமாறே இலங்கை கோரியுள்ளதாக அறியமுடிகின்றது.

சீனாவால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இந்த உளவுக் கப்பல் ஓகஸ்ட் 11ஆம் திகதியன்று நங்கூரம் இடும் என்றும்,

தொடர்ச்சி P2

# இந்தியாவின் எதிர்ப்பால் அனுமதி ரத்து?

இந்தியாவின் மிக கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து, சீனாவின் உளவு கப்பலுக்கான அனுமதியை ரத்து செய்யும் கடிதத்தை இலங்கை அனுப்பி உள்ளதென இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொருளாதார, அரசியல் நெருக்கடியில் சிக்கி இருக்கும் இலங்கைக்கு புதிய தலைவலியாக, உளவு கப்பலை அனுப்பி வைக்கிறது சீனா. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒரு வார காலம் இந்த உளவு கப்பல் நங்கூரமிட்டு நிற்கும்.

இந்த உளவு கப்பல் மூலம் தென்னிந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகள் அனைத்தும் சீனாவால் எளிதாக கண்காணிக்கப்படும். ஆகையால் இந்தியா இதற்கு ஆரம்பம் முதலே கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

தொடர்ச்சி P2





## பங்களிக்க பங்காளிகளுக்கு பதவிகள் அவசியமில்லை

ஜனநாயகம் தார்மிகத்தை மறந்து நாகரிகமற்ற முறையில் முடிவுகளை எடுத்திருந்தால் இன்று தான் ஜனாதிபதியாகியிருக்க முடியும் எனவும், ஆனால் நெறிமுறையற்ற ஜனாதிபதியாக ஆகாமல், மக்களின் விருப்பின்றி எந்தவொரு பதவிகளையும் எடுப்பதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காஸ் விலையும் இன்று குறையும்



சமையல் எரிவாயு விலை, இன்று (08) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய விலை திருத்தம் தொடர்பான பரிந்துரைகள்

தொடர்ச்சி P2

## அவசரகாலச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளில் திருத்தம்

நாட்டில் அமலில் இருக்கும் அவசரகாலச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் சிலவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேடல் மற்றும் கைது பற்றிய தண்டனைச் சட்டத்தின் சில பிரிவுகள் நீக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

### நான்கு ஆண்டு போராட்டத்துக்குப் பின்

## தமிழ் அகதி குடும்பத்துக்கு ஆஸியில் நிரந்தர விசா

**ஹஸ்பர்**



அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படும் ஆபத்தில் சிக்கி நான்கு ஆண்டுகள் குடிவரவுத் தடுப்புக் காவலில் இருந்த பிரியா- நடேசலிங்கம் எனும் தம்பதியான இலங்கை

தொடர்ச்சி P2

## யுவதி மாயம்

**சண்முகம் தவசீலன்**



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட திருமுறிகண்டி, வசந்தநகர் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய சிவகரன் ஜெயலக்சனா என்ற யுவதியை காணவில்லையென அவருடைய குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மீண்டும் பரீட்சை

2021 கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான செயன்முறை பரீட்சைக்கு தோற்ற முடியாது போன பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் பரீட்சை நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக, செயன்முறை பரீட்சையில் தோற்ற முடியாமற்போனவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமென திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## தேன்பூஜை...

வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹெரா, நேற்று (07) இரவு நடைபெற்ற ரந்தோலி பெரஹெராவுடன் ஆரம்பமானது.

இந்நிலையில், வேடுவர்களின் தலைவர் ஊருவரிகே வன்னியலே எத்தோ தலைமையிலான 32 பேர் அடங்கிய வேடுவர்கள், தலதா மாளிகையில் நேற்று (07) காலை, தேனை காணிக்கையாகச் செலுத்தி, தேன் பூஜை செய்தனர். இந்த தேன் பூஜை, 26ஆவது தடவையாக சம்பிரதாயபூர்வமாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஷேன் செனவிரத்ன)

## கால்களை இழுப்போரும் இருக்கின்றனர்



சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் பயணத்தின்போது கால்களை இழுக்கும் குழுவினரும் இருக்கின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அவ்வாறானவர்கள் யார் என்பதை தேடியறிய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி பொய் பேசுகிறார்



தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜனாதிபதி தெரிவுக்கான வாக்களிப்பில் டலஸ் அழகபெருமவுக்கு வாக்களிப்பதாக எடுத்த தீர்மானம் ஏகமனதானது மட்டுமல்ல; ரணிலுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தை கூட்டத்தில் எந்தக் கட்டத்திலும் ஒருவர் கூட கூறியிருக்கவில்லை என்று ‘டுவிட்’ செய்துள்ள கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி பொய் பேசுகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ‘பொறி’ கம்பியுடனேயே மரமேறிய சிறுத்தை மரம் விழுந்து மரணித்தது

**எஸ். கணேசன்**







டிக்கோயா, வனராஜா சமர்வீல் தோட்டப்பகுதியில் உள்ள மரமொன்றில் ஏறிய சிறுத்தையை உயிருடன் பிடிக்க எடுத்த நடவடிக்கை தோல்வியடைந்ததென நல்லத்தண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமர்வில் தோட்ட பகுதியில் உள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த பொறியில் நேற்று (7) காலையிலேயே சிக்கி காயமடைந்த குறித்த சிறுத்தை, காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே மரத்தில் ஏறியுள்ளது.

தொடர்ச்சி P2

# குப்பை லொறியில் ஏறவே மாட்டோம்



கடனை வழங்குவதற்கான நிபந்தனையாக 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதன்படி குறித்த அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கான யோசனைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கும்போது, எதிர்க்கட்சி என்கின்ற வகையில் நாம் அவற்றுக்கு ஆதரவை வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால் பாரிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கூறியதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்க முடியும். அதற்காக அரசாங்கத்துடன் இணைய வேண்டிய அவசியம் இல்லை எனவும் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் ராஜபக்ஷர்களின் குப்பைகளைக் அள்ளும் குப்பை லொறி எனவும், எனவே, இப்படியான ஓர் அரசாங்கத்தில் இணையும் அவசியம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருகோணமலைக்கு நடிகர் நாசர் விஜயம்

வடமலை ராஜ்குமார், அ.அச்சுதன்





திருகோணமலை மூதூர், சேனையூரில் பேராசிரியர் பாலசுகுமாரனின் மகள் அனாமிகா நினைவாக அமைக்கப்பட்ட அனாமிகா களரி பண்பாட்டு அமையத்தின் திறப்பு விழா, நேற்று முன்தினம் (06) இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன், கிழக்கு மாகாண கலாசார திணைக்களப் பணிப்பாளர் சு.சரண்யா, கிழக்கு பல்லைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் ச.மனோன்மணி உட்பட பல பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நடிகர் நாசர், "ஒரு கோட்டையைக் கட்டுவதை விடவும் உன்னதமான விடயம் இந்த அனாமிகா களரி பண்பாட்டு மையம் கட்டியது.

"நான் ஒரு விதத்தில் பொறாமையும் கொள்கின்றேன். நாங்களும் நடிகர் சங்கத்துக்கு ஒரு கட்டடம் கட்டிக்கொண்டிருக்கின்றோம். பல பிரபலங்கள் இருந்தும் பல ஆண்டுகளாகின்றன. ஆனால், ஓர் எளிய மனிதனாக இருந்து, தன்னுடைய நண்பர்கள் மூலமாகவும் தெரிந்தவர்கள் மூலமாகவும் செங்கல் செங்கற்களாகப் பெற்று, இந்தக் கலைக் கூடத்தை கட்டி முடித்துள்ளார் பேராசிரியர் பாலகுமாரன்" என புகழாரம் சூட்டினார்.

மேலும், சேனையூருக்கு வந்தது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. பேராசிரியர் பாலசுகுமாரன் ஐயாவை நான் வெகு நாள்களாக அறிவேன். நாடகம் எங்களுக்கு பொது மொழியாக இருந்தது. அவருடைய மாணவர்கள் என்னுடைய மாணவர்களாக இருந்திருக்கிறார்கள். நாங்கள் எப்போது பேசினாலும் நாடங்களைப் பற்றி வெகுவாக பேசுவோம்.

"ஒரு நாள் மிகுந்த துயரச்செய்தியோடு என்னிடம் வந்தார். பாலசுகுமாரன் ஐயா அவர்கள் தான் பல கனவுகளுடன் அன்பாக வளர்த்த தனது குழந்தை தன் எதிரிலேயே இயற்கை இழுத்துச் சென்றது என்றார். அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்றே எனக்கு தெரியவில்லை.

"ஒரு குழந்தையின் இழப்பு என்பது பெற்றோருக்கு மிகப்பெரிய இழப்பு. ஆனால், அதை ஒரு வைராக்கியமாக எடுத்துக் கொண்டு, இந்த இழப்பையும் ஓர் ஆக்கபூர்வமாக செய்ய முடியும் என்று ஒரு படிப்பினையை அவர் செய்து காட்டி இருக்கிறார்" என்றார்.

## சர்வகட்சி அரசாங்கம் குறித்து சு.க இவ்வாரம் இறுதி செய்யும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சி அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி இணைவதா, இல்லையா என்பது தொடர்பான இறுதி தீர்மானத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இவ்வாரம் அறிவிக்க உள்ளது.

குறிப்பாக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான சிரேஷ்ட உறுப்பினர்கள் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கட்சியில் உள்ள ஒன்று அல்லது இரண்டு எம்.பிக்கள் மாத்திரம் சர்வகட்சி அரசாங்கத்தில் இணையாதிருப்பார்கள் என அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவை இவ்வாரம் சந்தித்து கலந்துரையாட உள்ளதோடு, அதன் பின்னர் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான சுதந்திரக் கட்சியின் தீர்மானம் அறிவிக்கப்பட உள்ளது.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை சுதந்திரக் கட்சி முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதாகைகளை ஏந்தினால் பெற்றோல் சிக்கலாகும்



அனைத்து வேறுபாடுகளையும் மறந்து, வீழ்ந்த நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால், மக்கள் கோரும் சிஸ்டம் சேஞ்ச் ஏற்படுமென ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக நாட்டு மக்கள் முகங்கொடுத்து வரும் எரிபொருள், சமையல் எரிவாயு, உரப் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களால் தற்போது தீர்வு கிடைத்து வருவதாகவும், ஏனைய பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு மக்கள் பொறுமையுடன் நியாயமான காலத்தை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

காலியில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், போராட்டங்களுக்காக பதாகைகளை ஏந்தும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய எரிபொருள் இல்லாமற்போய், இளைஞர்களின் எதிர்காலமும் பாதிக்கப்படும் என்றார்.

பதாகைகளை ஏந்துவதால் பிரச்சினைகள் இல்லை. தொழிற்சங்க உரிமைகள் அனைவருக்கும் இருக்கின்றன. ஆனால், எமது நாடு வீழ்ந்து கிடக்கிறது. இதுவொரு வங்குரோத்து அடைந்த நாடு. இதனைப் புரிந்துகொண்டு இந்த அரசாங்கம் சரியானப் பாதையில் பயணிக்க 6 மாத காலத்தை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறிதுகாலம் அவகாசத்தை வழங்குவதன் ஊடாக பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்படும். கடந்த இரு வருடங்களாக காணக்கிடைக்காத இரசாயன உரங்கள் தற்போது கிடைத்து வருகின்றன என்றார்.

## கோட்டாவின் விசா நீடிக்கும் சாத்தியம்

பாரிய எதிர்ப்பு போராட்டங்களை அடுத்து, நாட்டை விட்டு வெளியேறி சிங்கப்பூரில் தற்காலிகமாக வசித்து வரும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது விசா காலத்தை மேலும் 14 நாள்களுக்கு நீடித்துக்கொள்வார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னரும் விசா 14 நாள்கள் நீடிக்கப்பட்டிருந்த நிலையில் இம்மாதம் 11ஆம் திகதியுடன் அந்த விசாக் காலம் முடிவடைய உள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசா காலத்தை மேலும் 14 நாள்களுக்கு நீடிக்க வேண்டும் என சிங்கப்பூரிடம் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமான கோரிக்கைகளை விடுக்காது எனவும், ஆனால், பிரதமரின் அலுவலகத்தின் ஊடாக உத்தியோகபூர்வமற்ற கோரிக்கைகள் விடுக்கப்படலாம் எனவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜூலை 09ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய போராட்டங்களை தொடர்ந்து, ஜூலை 13ஆம் திகதி மாலைத்தீவுக்கு சென்றிருந்த கோட்டாபய அங்கிருந்து 14ஆம் திகதி சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

## அரச வங்கியில் மோசடி: ஒத்துழைப்பு நல்கிய 62 வயதான பெண் கைது




அரச வங்கியில் ஆறு கோடியே 83 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை மோசடி செய்வதற்கு உதவி, ஒத்துழைப்பு நல்கிய பெண்ணொருவர் கோட்டை பிரதேசத்தில் வைத்து குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவத்தையில் அரச வங்கியொன்றில் போலியான ஆவணங்களை கையளித்து தனிப்பட்ட கடனுக்காக 48 ஆவணங்களை மோசடியாக கையளித்து ஏமாற்றியுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

பண மோசடியை செய்வதற்கு உதவிய வங்கியின் ஊழியரான பெண், மரணமடைந்துவிட்டார்.

அதற்கு ஒத்துழைப்பு நல்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அந்தப்பெண், அந்த வங்கியில் கடன்பிரிவில் கடமையாற்றிய ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட 62 வயதான அந்தப் பெண், கடவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன், கோட்டை நீதவானின் உத்தரவின் பிரகாரம், எதிர்வரும் 10 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## தேர்தலுக்கு சென்றால் உதவிகள் கிடைக்காது



நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொள்ளாது தேர்தலுக்குச் சென்றால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் நிதி உதவிகள் கிடைக்காது என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றும் எவரும் தேர்தல்களுக்கு எதிராகச் செயற்பட மாட்டார்கள். ஆனால், நாம் தற்போது தேர்தலுக்கு சென்றால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையென தெரிவித்து, சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்காது. எனவே, முதலில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்று 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் இருந்த பொருளாதார நிலைமைகளை மீள ஏற்படுத்த வேண்டும்.

அதன் பின்னரே நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள 22ஆவது திருத்தச் சட்டத்தில் 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பெரும்பாலான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதுபோல 20ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில நல்ல விடயங்களையும் நாம் அதில் உள்ளடக்கியிருக்கிறோம் என்றார்.

## கத்திக்குத்தில் ஒருவர் பலி

நவகமுவ பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து 42 வயதான நபரொருவர் நேற்று (07) கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் மரணமடைந்துள்ளார் என நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கித்துல்கல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஜயரத்ன பெரேரா என்பவரே, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்துள்ளார். பெண்ணொருவருக்கு தொந்தரவு கொடுத்தார் என்ற முறைப்பாட்டுக்கு அமைய, அந்தப் பொலிஸ் நிலையத்தின் சிறு முறைப்பாட்டு பிரிவில் வைத்து, விசாரணைகளை மேற்கொண்டிருந்த போதே, அப்பெண்ணுடன் வந்த அப்பெண்ணின் கள்ளக்காதலன் என அறியப்பட்டவர், இவ்வாறு கத்தியால் முதுகில் குத்தியுள்ளார். கடும் காயங்களுக்கு உள்ளான அந்த நபர், நவகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். கத்தியால் குத்திய நபர், கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் இந்துக் கலைக்கூடமும் அருங்காட்சியகமும் திறப்பு

வ.திவாகரன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட இந்து நாகரீகத்துறையில் இந்துக்கலைகூடமும் அருங்காட்சியகமும் திறப்பு விழா, எதிர்வரும் புதன்கிழமை (10) இடம்பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையிலும், இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி வ.குணபாலசிங்கம் துணைத் தலைமையில், யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் மா.செல்வராசா, பேராசிரியர் சி.மௌனகுரு முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் திபின். பீ.ஆர் உள்ளிட்ட அதிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மாணவியின் விபத்துக்கு காரணமான பேருந்தை விட்ட பொலிஸ் இருவரை கைது செய்தது

கெ.கீதாஞ்சன்

கிளிநொச்சி, A 35 வீதியின் பரந்தன், முரசுமோட்டை பகுதியில் பாடசாலை மாணவியை விபத்துக்கு உள்ளாக்கி தப்பிச் சென்ற பஸ்ஸை விடுவித்ததுடன், அதன் சாரதியையும் உடனடியாக விடுவித்த பொலிஸார், மாறாக பாதிக்கப்பட்ட சிறுமியின் சகோதரர் உள்ளிட்ட இருவரை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தனியார் வகுப்புக்கு நேற்று (07) காலை 7.45 மணிக்கு சென்ற குறித்த மாணவி, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் எற முற்பட்டுள்ளார். மாணவி ஏறுவதற்கு முன்னர் பஸ்ஸை வேகமாக முன்னோக்கி எடுத்ததால் மாணவி கீழே விழுந்து விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த மாணவி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், பஸ்ஸின் சாரதி சம்பவ இடத்திலிருந்து பஸ்ஸை ஓட்டிச் சென்றுவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவின் சகோதரர் உட்பட இருவர், விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸைத் துரத்திச் சென்று, வழி மறித்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும், சம்பவ இடத்திற்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸையும் விபத்தை ஏற்படுத்திய சாரதியையும் உடனடியாகவே விடுவித்துள்ளதுடன் மாறாக, பாதிக்கப்பட்ட சிறுமியின் சகோதரர் உள்ளிட்ட இருவரை கைது செய்துள்ளனர்.

அந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், அவ்விருவரையும் தாக்கினர் என்ற குற்றச்சாட்டின் கீழேயே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஏனையோர் அமைதியாக இருந்துவிட முடியாது



நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வைக் காணும்போது, அதன் பொறுப்பை ஒருவர் மீது மாத்திரம் சுமத்திவிட்டு ஏனையோர் அமைதியாக இருந்துவிட முடியாதென வேடுவர்களின் தலைவர் ஊருவரிகே வன்னியலே எத்தோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பது முக்கியமான ஒன்று. நாட்டில் உள்ள பிரச்சினைகள் அனைத்தும் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் உரித்தானது இல்லை. எனவே, நாட்டுப் பிரச்சினையை தீர்க்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

**அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

161/3, துவா வீதி, பத்தகான, பிட்டகோட்டை இலங்கை என்ற முகவரியைச் சேர்ந்த ஃபெரோஸ் ஓமர் (தே.அ.அ. இல. 641052566V) ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருவது என்னவென்றால்இ எம்.ஃ.எஸ்.ஆர்.பி. குணதிலக (தே.அ.அ. இல. 951783307V) மற்றும் ஏ.ஜே.ஃ. மோதா (தே.அ.அ. இல. 888030840V) ஆகியோர் சாட்சியாக 2021 ஜனவரி 19 ஆம் திகதியிடப்பட்ட இல.150, புனித சூசையப்பர் வீதி, கொழும்பு -14 என்ற முகவரியில் அமைந்துள்ள ஜேபி .பினான்சியல் (பிரைவேட்) லிமிட்டெட் (கம்பனி கூட்டிணைப்பு இல. PV18585) என்ற நிறுவனத்திற்கு எனது வழக்கறிஞராகச் செயற்படுவதற்கு என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இலங்கை சட்டத்தின் முன்னிலையில் இரத்துச்செய்யப்பட்டு. நீக்கப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது. இந்த அட்டோர்ணி அதிகாரம் இனிமேல் சட்டத்தின் முன்னிலையில் செல்லுபடியாகாத எவ்விதமான அதிகாரமுமற்ற ஆவணமாகும்.

ஃபெரோஸ் ஓமர்

சமூகம் சார்ந்த கோரிக்கைகளுடன்

# சர்வகட்சியில் அங்கம் பெறுக

## முஸ்லிம் கட்சிகளிடம் வேண்டுகோள்

**அஸ்லம் எஸ்.மௌலானா**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கான உத்தரவாதங்களை பெற்றுக் கொண்டு, அமையப்போகும் சர்வகட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டுமென கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயத்தை வலியுறுத்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் தலைமைகளுக்கு அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஜனாதிபதி ரணிலை சந்தித்து, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

"ஆனால், அமைச்சுப் பதவி தவிர்ந்த, சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர் ஏதாவது பேசினாரா என்பது பற்றி அறியக்கிடைக்கவில்லை.

"அதேவேளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன, தாம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் என்ற ரீதியில் இதுவரை ஜனாதிபதியை சந்தித்து எதுவும் பேசவில்லை.

"சர்வகட்சி அரசாங்க விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் சமூக மட்டத்தில் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் ஷூரா சபை, உலமா சபை, முஸ்லிம் கவுன்சில் உள்ளிட்ட தேசிய ரீதியிலான சிவில் அமைப்புகளின் ஆலோசனைகளையாவது பெற்று செயற்படலாம்.

"இனியும் தாமதியாமல் கிடைத்திருக்கின்ற நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, ஜனாதிபதியால் நிறைவேற்றுவதற்கு சாத்தியமான முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துப் பேச முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் முன்வர வேண்டும்" என்றார்.

## ஹெரோய்னுடன் குடும்பஸ்தர் கைது

**ஒலுமுதீன் கியாஸ்**

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுவூற்று பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர், திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவால் நேற்று முன்தினம் (06) மாலை கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபர்களிடம் இருந்து 3.73 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் பொதி கைப்பற்றப்பட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறிஞ்சாக்கேணி, நடுவூற்று பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இம்ரான் எம்.பியுடன்

## கிண்ணியா சுகாதார துறையினர் சந்திப்பு

**எப்.முபாரக்**

கிண்ணியாவின் சுகாதாரத் துறையினருக்கும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பிற்கும் இடையிலான சந்திப்பு கிண்ணியாவில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றது.

எதிர்கால முன்னெடுப்புகள் சம்மந்தமான இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

கட்டையாறு, மாலிந்துறை, பெரியாற்றுமுனை, சின்ன கிண்ணியா போன்ற பகுதிகளில் அதிகரித்துவரும் புற்று நோய்கான காரணங்களும் கொரோனா, குரங்கு அம்மை போன்ற தொற்றுகளுக்கு எதிர்காலத்தில் எவ்வாறு முகங்கொடுப்பது உள்ளிட்ட சுகதாரத்துறை சார்ந்த பல விடயங்களும் கலந்துரையாடபட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் கனி, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரிஸ்வி, குறிஞ்சாக்கேனி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அஜித், சூறா சபை தலைவர் பரீட் (ஓய்வுபெற்ற அதிபர்), வைத்தியர் சவ்பான், வைத்தியர் மாஸாத் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.



கிழக்கை சேர்ந்த

## தமிழ் பேசும் ஒருவரை ஆளுநராக நியமிக்கவும் தொடரும் கோரிக்கை

**எம்.எஸ்.எம். ஹனீபா**

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் ஒருவரை, கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக, இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன், நேற்று (07) தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வெளி மாகாணங்களை சேர்ந்த எவரும் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டாம். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில் மூவின மக்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

மூவின மக்களும் வாழும் இம் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர் பொருத்தமானவராக இருப்பார்.

வெளி மாகாணங்களை சேர்ந்தவர்களே கிழக்கின் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். எமது மாகாணத்தை சேர்ந்த பொருத்தமான ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். இதுவே எமது மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

எனவே, கிழக்கு மாகாண ஆளுநரை நியமிப்பதற்கு பரிந்துரை செய்யும் போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை ஆளுநராக நியமிக்கவும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"வெளி மாகாணங்களை சேர்ந்த எவரும் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டாம். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில் மூவின மக்களும் ஏற்றுக் கொள்வார்கள். இதுவே எமது மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்**

திராய்க்கேணி படுகொலை:

## 32ஆவது வருட நினைவு நிகழ்வு



**சகா**

1990 ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 32ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

அகம் மனிதாபிமான வள நிலையமும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், சமூக செயற்பாட்டாளர் த.பிரதீபன், சூழலியல் அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ரி.கிருஷாந்த், அகம் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் திருமதி நவரட்ணம்அஞ்சலிதேவி ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டார்கள்.

படுகொலை செய்யப்பட்ட 54 பேரின் திருவுருவப் படங்களுக்கு முன்னால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தி, அக வணக்கம் செலுத்தப்பட்டது.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளான 40 பேரில், நேரிலே கண்முன்னே சம்பவத்தை பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு தாய்மார்களான அன்னம்மா, மாரிமுத்து மற்றும் கிராம தலைவர் சி.கார்த்திகேசு ஆகியோர் துயர் பகிர்ந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடைக்கின்ற

# முதலாவது தேங்காயை ஜனாதிபதி உடைத்தார்

**வி.நிதர்ஷன்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடைய பாணியிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடைக்கின்ற முதலாவது தேங்காயை உடைத்து இருக்கின்றாரென இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் வட மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ. கே.சிவஞானம் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்ததாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணுடன் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற விடயத்தை கெட்டித்தனமாக ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கின்றார்.

"அந்தளவிற்கு தமிழ்க் கூட்டமைப்பு தலைவர்கள் சோரம் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது.

"தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் எல்லோரையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும்.

"எல்லோரையும் அணைத்து செல்லக்கூடிய சுபாவம் கொண்ட சித்தார்த்தன், இந்த முயற்சியை தொடர்வார்.

"என்னைப் பொறுத்தவரையில் தமிழரசு கட்சியின் உப கட்சியினுடைய நிகழ்வே இது. இங்கு அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியில் இருந்து வந்தவர்களே. தற்போது அது உடைந்து இருந்தாலும் கூட அடிப்படையில் தமிழரசு என்ற ஒற்றுமை இருக்கின்றது" என்றார்.

சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வை

## கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தம்

**செந்தூரன் பிரதீபன்**

வலிகாமம், அச்சுவேலி, வயாவிளான், செல்வநாயகபுரம் பகுதிகளில் சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு அதிகரித்துச் செல்வதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அச்சுவேலி உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், இவ்வாறு சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களிடம் பணம் பெற்று, அவர்களை கைது செய்வதிலிருந்து விலகிக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சுண்ணாம்புக்கல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களை கைது செய்ய சிவில் உடையில் செல்லும் பொலிஸ் உத்தியோத்தர்களுக்கும் அவர் இடையூறு விளைவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக குறித்த பகுதிகளில் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்படுவதுடன், பாரிய பிரச்சினைகள் உருவெடுப்பதாக, மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

பொலிஸுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

## இன்று போராட்டம்; வலுக்கும் ஆதரவு

**சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன், வி.நிதர்ஷன்**



இலங்கை நிருவாக சேவை சங்கம் - வடக்கு மாகாண கிளை

Sri Lanka Administrative Service Association – Northern Province Branch

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரும் இலங்கை நிர்வாக சேவை தரம் ஐ சேர்ந்தவருமான சி.ஜெயகாந்தின் அலுவலகத்திலும் உத்தியோகபூர்வ விடுதியிலும், முறையான தேடுதல் அனுமதியின்றி கடந்த 30ஆம் திகதி மாலை 6.30 தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரையான காலப்பகுதியில் சோதனையிடப்பட்டது.

இதன்போது அலுவலக தேவைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் எவருடைய அனுமதியும் இன்றி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹேரத் என்பவரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள கோரி, வட மாகாண இலங்கை நிர்வாக சேவை சங்க உத்தியோகத்தர்கள் மாகாணம் தழுவிய சுகவீன விடுமுறை போராட்டத்துக்கு இன்று (08) அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவுள்ளதுடன், மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் ஊடக சந்திப்பையும் நடத்தவுள்ளதாக இலங்கை நிர்வாக சேவை சங்க வடமாகாண கிளை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரை அவமதிக்கும் விதமாகச் செயற்பட்ட பொலிஸாரின் நடவடிக்கையை கண்டித்து, வடமாகாண இலங்கை நிர்வாக சேவையாளர் சங்கம், இன்று (08) முன்னெடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைக்கு, வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் முழுமையான ஆதரவை வெளியிட்டுள்ளது.

## நெல் உலரவிடும் இடமின்றி சிரமம்

**சுப்பிரமணியம் பாஸ்கரன்**

சிறுபோகத்தில் அறுவடை செய்யும் நெல்லை உலர வைப்பதற்கான போதிய நெல் உலரவிடும் தளங்கள் இன்றியும் அறுவடை செய்யும் நெல்லை சந்தைப்படுத்த முடியாமலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கிளிநொச்சி, வன்னேரிக்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வன்னேரிக்குளத்தின் கீழுள்ள விவசாயிகள் தற்போது சிறுபோக அறுவடையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அறுவடைக்கு தேவையான எரிபொருள் இன்மை, நெல்லை உலர விடுவதற்கான தள வசதிகள் இன்மை என்று பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதாக, இவ்விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தனியாரோ அல்லது நெல் சந்தைப்படுத்தும் சபையோ தங்களுடைய கிராமங்களுக்கு வருகை தரவில்லை என்றும் இதனால் நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் வன்னேரிக்குளம் விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.



## புளொட்டின் புதிய நிர்வாகம் தெரிவு

புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது பொதுச் சபை கூட்டம், இணுவில் பகுதியிலுள்ள தனியார் மண்டபமொன்றில் சுந்தரம் அரங்கில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. இதன்படி, அக்கட்சியின் தலைவராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

கட்சியின் செயலாளராக நா.இரட்ணலிங்கமும் பொருளாளராக க.சிவநேசனும் ஊடகப் பிரிவின் தலைவராக பா.கஜதீபனும் சர்வதேச பேச்சாளராக செ.ஜெகநாதனும் தெரிவாகினர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் சர்வதேச நாடுகளில் இயங்குபவர்கள் உட்பட 145 பேராளர்கள் வரை கலந்துகொண்டிருந்ததுடன், தீர்மானங்களும் எட்டப்பட்டன.

கோட்டாபயவை கைது செய்யுமாறு

## கையெழுத்து வேட்டை

**கனகராசா சரவணன்**




சிங்கப்பூரில் உள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, சிங்கப்பூர் அரசு கைது செய்து, சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி, தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றின் சூத்திரதாரியான கோட்டாபயவை, சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்வதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தி, உலகளாவிய ரீதியில் கையெழுத்து போராட்டம் இடம்பெறுகின்றது.

அதற்கு வலுச்சேர்க்கும் முகமாகவே, நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபிக்கு முன்னாள் கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

# மோஹினி எல்லையில் வீதி பிளந்தது

■ எச்.எம்.ஹேவா

மஸ்கெலியா- நல்லத்தண்ணி பிரதான வீதியில் மோஹினி எல்லைக்கு அண்மையில், லக்ஷபான வாழைமலைத்தோட்டத்தின் 100 மீற்றர் தூரம் வெடித்துள்ளது. இதனால் அவ்வீதியின் ஊடான போக்குவரத்து முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அவ்விடத்தில் வீதி தாழிறங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலையகத்தில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக பல்வேறான அசௌகரியங்களுக்கு மக்கள் முகங்கொடுத்துள்ளனர்.

அந்த வீதியின், மேற்பரப்பில் வெடிப்பு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அறிவித்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி டப்ளியூ.பி.எஸ். வீரசேகர, அப்பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைய வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்றார்.

இந்நிலையில், இவ்விடத்தை ஆராய்ச்சி செய்வதற்காக தேசியக கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அதிகாரிகள் வருகைதரவுள்ளனர். அவர்களது ஆராய்ச்சிக்குப் பின்னரே, வீதியை அவ்விடத்தில் திறப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.



## மழையால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார் அமைச்சர் பந்துல

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பல தோட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலங்களில் சில, கடந்த சில நாள்களாக பெய்துவரும் அடைமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தின் அள்ளுண்டு செல்லப்பட்டன. இதனால், மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அந்த வகையில் நாவலப்பிட்டி- இங்குருஓயா பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், அவற்றை பார்வையிட வருகை தந்திருந்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, வட்டவளை ஹைட்ரி தோட்டத்தில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களையும் பார்வையிட்டார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் அழைப்பை ஏற்று குறித்த பகுதிகளுக்கு சென்று, மக்களின் துயரங்களை கேட்டறிந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, மழையால் நாவலப்பிட்டி பகுதி அதிகம் சேதங்களைச் சந்தித்துள்ளதாக தெரிவித்த அவர், இந்த மக்களின் அவல நிலை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.



## 6 கிலோ கிராம் போதைப்பொருளுடன் நால்வர் சிக்கினர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஆறு கிலோ 800 கிராம் போதைப்பொருளுடன் நால்வர் பொகவந்தலாவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரும் நேற்றுமுன்தினம் (6) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பொகவந்தலாவை பிரதேசத்தை அண்மித்த தோட்டங்களிலுள்ள இளைஞர்களை இலக்கு வைத்து, இந்தப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, சந்தேகநபர்களின் வீடுகள், அவர்களின் வர்த்த நிலையங்களை பொகவந்தலாவை பொலிஸாரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், இதன்போதே இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார், அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.



## வாழ்வாதார உதவிகள்…

இடர்காலத்தில் வாழ்வாதார உதவி தேவைப்படும் 50 குடும்பங்களுக்கு, நுவெரலியா பிராந்திய மக்கள் வங்கியின் இந்துமா மன்றத்தின் அனுசரணையில், கொட்டகலை வீ ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு கொட்டகலை பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

(பி. கேதீஸ்)







## மலையக மக்களின் பல பிரச்சினைகளுக்கு புதிய ஜனாதிபதி தீர்வை வழங்கத் தயார்

### என்கிறார் கணபதி கனகராஜ்

■ கேதீஸ்



மலையக மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக உரிய தீர்வை வழங்கத் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவிடம் தெரிவித்துள்ளார் என, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அண்மையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் அழைப்பை ஏற்று, ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடல் நடத்திய போதே, இது குறித்து தெரிவித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த விடயங்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருந்த பிரதேச செயலகங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும். சமுர்த்தி திணைக்களத்தினூடான சேவைகள் பெருந்தோட்ட பிரதேசத்தின் சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் விஸ்தரிக்க பட வேண்டும்.

மலையகப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பண்டங்களை பற்றாக்குறை ஏற்படுவதை நிவர்த்தி செய்து அவற்றை கிரமமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளிட்ட எமது பிரதான கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி தரப்பிலிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன என தெரிவித்துள்ளார்

## குமண மற்றும் யால தேசிய வனம் ஊடாக 28ஆயிரம் யாத்திரிகர்கள் கதிர்காமத்தை வந்தடைந்தனர்



■ அஜித்லால் சாந்தஉதய

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குமண மற்றும் யால தேசிய வனம் ஊடாக, 28 ஆயிரத்து 838 பேர் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை சென்றுள்ளனர் என கிழக்கு மாகாண உதவி வனஜீவராசிகள் பணிப்பாளர் பிரசாந்த விமலதாஸ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கதிர்காமத்துக்கு யாத்திரிகர்கள் செல்வதற்காக குமண தேசிய வனத்தின் பிரதான நுழைவாயில் ஜூலை மாதம் 22ஆம் திகதி திறக்கப்பட்டதுடன், தினமும் காலை 6 மணிதொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும் குமண தேசிய வனத்தின் பிரதான நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

குறித்த அனுமதி, கடந்த ஐந்தாம் திகதி பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு யால மற்றும் குமண தேசிய வனங்கள் ஊடாக சென்ற 28,838 யாத்திரிகர்களுள் 1,736 பேர் 18 வயதுக்குக்கு குறைந்த சிறுமிகள் என்றும் 2,406 பேர் 18 வயதுக்கு குறைந்தவர்கள் என்றும் 9,958 பேர் 18 வயதுக்கு மேற்பட்ட யுவதிகள் என்றும் 14,767 பேர் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மழைக்கான எவ்வித அறிகுறியும் யால மற்றும் குமண தேசிய வனப் பிரதேசத்தில் காணப்படாத நிலையில், 26, 27, 28ஆம் திகதிகளில் குறித்த வனப் பகுதிக்குள் பிரவேசித்தவர்கள் கடும் மழையுடனான வானிலைக்கு முகம்கொடுக்க நேரிட்டது.

இதன்போது குறித்த இரண்டு வனப்பகுதிகளையும் பிரிக்கும் கும்புக்கன் ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்ததால், யாத்திரிகர்கள் பெரிதும் சிரமத்தை எதிர்கொண்டதாக குறித்த வனப்பகுதிக்கு பொறுப்பன அதிகாரி ஆ.ஏ.டீ.டி சமரநாயக்க தெரிவித்தார்.

எனினும், இதன்போது இராணுவத்தினர், கடற்படையினரின் உதவியுடன் யாத்திரிகர்கள் அக்கரையிலிருந்து இக்கரைக்கு பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டனர் என்றார்.

## சரிந்துள்ள கற்களை அகற்றுமாறு சாரதிகள் வேண்டுகோள்

■ உபெந்திரபிரியங்கர

கலவான- மத்துகம பிரதான வீதியின் சமன் தேவாலயத்துக்கு அருகில் கற்பாறைகள் சரிந்து விழுந்தமையால் குறித்த வீதியுடனான போக்குவரத்து ஒருவழி ஒழுங்கையாக மாற்றப்பட்டுள்ளது.

கற்கள் சரிந்து விழுந்து சில நாள்கள் கடந்துள்ள நிலையில், அவற்றினை அகற்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இதுவரை நடவடிக்கை எடுக்காமை காரணமாக, இரவு நேரங்களில் வாகனங்கைளை செலுத்தும் சாரதிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் வேறு விபத்துகள் இடம்பெறுவதற்கு முன்னர், குறித்த கற்களை அகற்றுமாறும் சாரதிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



## 'கஞ்சா' பாகன் சிக்கினார்

■ ஷேன் செனவிரத்ன

கண்டி எசல பெரஹெராவுக்கு யானையுடன் வந்த பாகன், கஞ்சா போதைப்பொருடன் மாளிகாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், மஹரகம பிரதேசத்தில் இருந்து யானையுடன் வந்துள்ளார். தேவாலயத்தின் முன்பாக நின்றிருந்த நிலையில் நேற்று (07) கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த மாளிகாவ பொலிஸார், மேலதிக விசாரணைகளுக்காக அவர், கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றனர்.

## ரயில் சேவையை ஆரம்பிக்கக் கோரிக்கை

■ ஏ.எம்.ஜலீல்

மாத்தளையிலிருந்து கொழும்புக்கான நேரடி ரயில்சேவையொன்று தினந்தோறும் காலை 6.50 மணிக்கு கடந்த காலங்களில் நடைபெற்று வந்தது. கொழும்பு உட்பட அந்தந்த ஊர்களுக்கு பயணப் பொதிகளுடன் செல்லக்கூடிய ரயில் பயணிகளுக்கு இச்சேவை, பெரிதும் உதவியாக இருந்தது.

எனினும், கொரோனா காலத்தில் இச்சேவை இடைநிறுத்தப்பட்டது. அதன்பின்னர், இன்று வரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால், மாத்தளையிலிருந்து கொழும்புக்கும் கொழும்பில் இருந்து மாத்தளைக்கும் நேரடியாக பயணம் செய்யவேண்டிய ரயில் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். ஆகையால், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட மாத்தளை-கொழும்பு நேரடி ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், இந்த ரயில்சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு மாருகொன சமூக ஆர்வலர் ஏ.ஆர்.சாஹுல்ஹமீட் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியுள்ளார்.

# உதவிக்கரம் நீட்டினால் போதாது; உருப்படியான திட்டங்களை வகுக்கவும்

இயற்கையின் மீதான மனிதனின் சுரண்டல், ஆக்கிரமிப்பு உள்ளிட்டவை நிறுத்தப்படும் வரையிலும் இயற்கை அனர்த்தங்களை தவிர்க்கவே முடியாது, ஆனாலும், ஒவ்வொரு வருடத்திலும் ஒரேமாதிரியான அனர்த்தத்தில் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் சிக்கிக்கொள்வார்களாயின், அவர்களிடத்தில் போதியளவு விழிப்புணர்வு இல்லை.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காலநிலை நாட்டில் நிலவிக்கொண்டு இருக்கிறது. ஏழு மாட்டங்களில் கடுமையான மழை பெய்கிறது; வெள்ளப்பெருக்கும் ஆங்காங்கே மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இன்னும் சில பிரதேசங்களில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

ஆற்றைக்கடக்கும் போது நீரில் அடித்துச்சென்ற சம்பவமும், ஓடைக்குள் விழுந்து மரணமடைந்த சம்பவமும் இடம்பெறாமல் இல்லை. இவ்வாறான சம்பவங்கள், கடந்த காலங்களிலும் சீரற்ற வானிலை காலக்கட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடும். அனர்த்தங்கள் அடுத்தடுத்த மழைக்காலங்களில் இடம்பெறுமாயின், மக்களிடத்தில் போதியளவான விழிப்புணர்வு இல்லை என்பதே அர்த்தமாகும்.

அதுமட்டுமன்றி, கவனயீனமும் முக்கியமான காரணமாக இருக்கிறது. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது, முன்னெச்சரிக்கையாக இருந்துகொள்வோமாயின், தேவையில்லாத உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும் போது, ஆற்றைக்கடக்கவே கூடாது. சாதாரண நாள்களில்கூட மிகக்கவனமாக கடக்கவேண்டும். நீரேந்தும் பிரதேசங்களில் மழைபெய்தால், ஆற்றின் அடியில் நீரோட்டத்தின் வேகம் அதிகரித்துக் காணப்படும். சில வேளைகளில் இழுத்துச் சென்றுவிடும்.

இவ்வாறான இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசியல் தலைவர்கள் உட்பட பலரும் உதவிக்கரம் நீட்டிவருகின்றனர். இழந்த உயிரை மீட்டெடுக்க முடியாது. ஆனால், எதிர்காலங்களில் இவ்வாறான பேரிழப்புகள் இடம்பெறாத வகையில், புதிய பாலங்களை நிர்மாணித்துக்கொடுக்க, அரசியல்வாதிகள் முன்வரவேண்டும்.

அதுமட்டுமன்றி, இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய இடங்களில் கட்டடங்களை எவ்வாறு நிர்மாணிப்பது, படிகளை எவ்வாறு கட்டுவது, மண்சரிவு ஏற்படாதவாறு எவ்வாறான படிமுறைகளைப் பின்பற்றுவது, ஆறு அல்லது நீரோடைகளை கடக்கவேண்டுமாயின் தற்பாதுகாப்பாக எவற்றை செய்து கொள்ள வேண்டும் உள்ளிட்டவை தொடர்பில், பொது அமைப்புகள் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, இயற்கையின் மீது எவ்வாறு அன்பை செலுத்தவேண்டும் என்பதையும் பாடசாலைகளில் கற்றுக்கொடுக்கவேண்டும். ஒவ்வொரு முக்கியமான நாள்களில் மரக்கன்றுகளை நாட்டுவதையும் வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சில இயற்கை அனர்த்தங்களை தவிர்க்கமுடியாது. எனினும், வீட்டின்மீது மண்திட்டு விழுகிறது என்றால், அந்த வீட்டின் உரிமையாளரே முழுமையாக பொறுப்புக்கூறவேண்டும். மண்திட்டுகளை குடைந்து வீடுகளை நிர்மாணித்தால், நிச்சயமாக மண்சரிவு ஏற்படுவதை தவிர்க்கவே முடியாது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் நின்றுவிடாது, எதிர்காலத்தில் அனர்த்தங்கள் ஏற்படாதவாறு, உருப்படியான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

## எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

‘காதல்’ ஆராயும் எண்ணத்தை விட்டுவிடுகின்றது. காதலில் புகுந்தாலே, எதுவும் நினைவில் நிற்பதில்லை. சரி-பிழைகளைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.

திருமணம் முடித்த பின்னர், காதலர்களுக்கு ஒரேமாதிரியாகக் காதல் சுரந்தால், வாழ்வு வெற்றியுடனேயே துலங்கும். வெறும் உணர்ச்சியுடன் மணவாழ்வில் புகுந்தால், குடும்ப வாழ்வு தெவிட்டியும் விடலாம். ஆனால், பொறுமை காட்டினால் வாழ்வு மலரும். கோபதாபங்களை நிலையாக வைத்திருக்காது விட்டால், வீட்டில் என்றும் நிம்மதிதான்.

பொய்மை, பேராசை, பொறாமை போன்றவற்றால் குடும்ப உறவு உறங்கிவிடுகின்றது. தவறுகளை மன்னிக்க வேண்டும். சரியானதும் நல்ல காரியங்களைப் பாராட்டினால், குடும்பத்தில் மனச்சுமைகள் வரவே வராது. இன்பகரமான வாழ்க்கையில், பிறர் தலையீடு அதிகரிக்கவிடலாகாது. குடும்பங்களுக்குள் புகுந்து, உறவுகளை மோதவைப்பதில், சிலருக்கு அலாதிப்பிரியம். எச்சரிக்கையாக இருங்கள்.

ஒப்பீடு செய்யாமல், கிடைத்த வாழ்க்கையே மேன்மையானது என எண்ணுங்கள். குடும்பம் கோவில் போன்றது. இல்-அறம் தழைத்து ஓங்கும் இடம் வீடு ஆகும். ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்க வேண்டும்; உயர்த்த வேண்டும். எடுத்துக்காட்டாக வாழ்வது, பேரின்ப நிலை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களால் வியாபாரத்துக்கு பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான மல்லாவி எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருளை பெற்றுச் செல்வதற்காக தரித்து நிற்கும் வாகனங்கள், தமது கடை வீதி வாயில்களை மூடி நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதால், தமது வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைந்து உள்ளதாக வர்த்தகர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மல்லாவி வர்த்தக சங்கம் ஊடாக, துணுக்காய் பிரதேச செயலாளர் மற்றும் மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கூட்டாக வர்த்தகர்களால் அனுப்பப்பட்டுள்ள கோரிக்கை கடிதத்திலேயே, தமது வியாபார நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடை வாயில்களில் நீண்ட நாள்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களால், வர்த்தகர்களாகிய தாமும், வாடிக்கையாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்தே குறித்த கோரிக்கை மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

யது பாஸ்கரன்



இனப்பிரச்சினைக்கான

# அரசியல் தீர்வு வருமா?



என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் அக்கறை செலுத்தி வருகிறார்.

‘சர்வகட்சி அரசாங்கம்’ என்பதன் மூலம், பொருளாதாரத்தில் வீழ்ந்துபோய், வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை, மீளக்கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளை எடுப்பதே அவரது திட்டம். அனைத்துக் கட்சிகளும் ஒரு பொது நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவு தெரிவிக்கும் போது, அதை நடைமுறைப்படுத்துவது மிக இலகுவாயிருக்கும். அத்துடன், மக்களை திருப்திப்படுத்துவதும், அல்லது குறைந்தபட்சம் சாந்தப்படுத்துவதும் பெருமளவுக்குச் சாத்தியமாகும் என்பதுதான், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதன் பின்னணியிலுள்ள சிந்தனையாக இருக்கும்.

வழமைபோல, எதிர்க்கும் கட்சியான ஜே.வி.பி, இதனை எதிர்த்து நிற்கிறது; இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. நாட்டை ஆளும் எண்ணத்தில், அரசியல் செய்யும் பல கட்சிகள் இருந்தாலும், காலம் முழுவதும், எதிர்ப்பரசியல் செய்யும் எண்ணத்தில் இயங்கும் கட்சிகளும் உள்ளன. ஜே.வி.பி. இதில் இரண்டாவது ரகம்.

மக்களின் எதிர்ப்பை, கொதிப்பை, சினத்தை தமக்குச் சாதகமாக்கி, தமது வாக்குவங்கியை அதிகரிப்பது பற்றித்தான் ஜே.வி.பி சிந்திக்கிறது என்றே தோன்றுகிறது. மூன்றாக இருக்கும் தமது பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை, 2004இல் தமக்கிருந்ததைப் போல, 39 பாராளுமன்ற உறுப்பினர்களாக அதிகரிக்கும் கனவில் ஜே.வி.பி இயங்கிக்கொண்டிருக்கலாம். ஆனால், ஜே.வி.பியாகத் தனித்துப் போட்டியிட்டு, அந்த 39 ஆசனங்களும் ஜே.வி.பிக்குக் கிடைக்கவில்லை. சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் கொடூர முகமாக ஜே.வி.பி இருந்தபோது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் பங்குதாரராக, அந்தத் தேர்தலில் போட்டியிட்டே ஜே.வி.பிக்கு 39 ஆசனங்கள் கிடைந்திருந்தன.

மறுபுறத்தில், சரத் பொன்சேகா உட்பட்ட சிலர், சர்வகட்சி அரசாங்கத்தை எதிர்ப்பதன் காரணமும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நீண்டகாலத் திட்டமாகத்தான் இருக்கமுடியும். ராஜபக்ஷர்கள் பிரபல்யம் இழந்திருக்கும் இன்றைய நிலையில், அரசியலில் அந்த இடைவெளியை நிரப்ப, டளஸ் அழகப்பெரும மட்டுமல்ல, சரத் பொன்சேகா, சம்பிக்க ரணவக்க போன்றோரும் கனவு காண்கிறார்கள்.

சுதந்திர இலங்கையின் சாபம் என்பது, சிங்கள-பௌத்த பேரினவாத அரசியல் ஆகும். இலங்கையை மிக மோசமான ரீதியில் கூறுபோட்டு, ஆரோக்கியமான அரசியல் கலாசாரமொன்றைக் கட்சியெழுப்ப முடியாதவாறு, சிங்கள-பௌத்த பேரினவாதம், இலங்கை அரசியலைப் பீடித்திருந்தது.

அதிகாரத்தைக் கைப்பற்றுதலுக்கான போட்டியென்பது, யார் மிகப்பெரிய சிங்கள-பௌத்த பேரினவாதி என்ற போட்டியாகவே மாறிப்போனது. பண்டாரநாயக்க, சிறிமாவோ, ஜே.ஆர்., சந்திரிகா, மஹிந்த, கோட்டா என, சிங்கள-பௌத்த இன-மதத் தேசிய வாக்குவங்கியைக் கவர்வதற்காக, சிறுபான்மை இனத்தவருக்கு எதிராக எதையும் செய்யத் துணிந்தவர்களே, பலமான தலைவர்களாக, பெரும்பான்மை மக்கள் ஆதரவோடு வெற்றிபெற்றார்கள். இதுதான், இலங்கையின் கறுப்பு வரலாறு.

இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம், 1983 ஜூலை 11 ஆம் திகதி, ‘லண்டன் டெய்லி டெலிகிராப்’ பத்திரிகைக்கு இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன அளித்திருந்த ஒரு குறுஞ்செவ்வி ஆகும். அந்தப் பேட்டியில், அவர் சொன்ன ஒரு விடயம், அவரது இனவாத முகத்தைத் தோலுரித்துக் காட்டியது மட்டுமல்லாது, அன்று தமிழ் மக்களுக்குப் பெரும் ஆபத்துக் காத்திருக்கின்றது என்பதை உணர்த்தும் சமிக்ஞையாகவும் இருந்தது.

அந்தக் குறுஞ்செவ்வியில், “யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி, இப்போது நான் கவலைப்படவில்லை; நாம் அவர்களைப் பற்றி யோசிக்க முடியாது. அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ, அவர்கள் எம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் பற்றியோ யோசிக்க முடியாது; வடக்கின் மீது எவ்வளவுக்கு எவ்வளவு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு இங்குள்ள சிங்கள மக்கள் சந்தோஷப்படுவார்கள்”.

1990களில், தமது மாக்ஸிஸப் புரட்சி தோற்கடிக்கப்பட்டபின்னர், தம்மை ஜனநாயக அரசியலுக்குள் கொண்டு வந்த ஜே.வி.பி, மக்களாதரவைப் பெறுவதற்காக, சிங்கள-பௌத்த பேரினவாதத்தைக் கையிலெடுத்தது. 2000களில் மிகப்பெரிய, சிங்கள-பௌத்த பேரினவாத சக்தியாக ஜே.வி.பியே திகழ்ந்தது. தமிழ் மக்களுக்கு எதிரான மனநிலையை, சிங்கள-பௌத்த மக்களிடையே விதைத்தில், ஜே.வி.பியின் பங்கு அளப்பரியது.

மஹிந்த ராஜபக்ஷ, யுத்த வெற்றியை நோக்கி பயணித்து, அதை நெருங்கும் வரை ஜே.வி.பியே, சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் குத்தகைக்காரராக இருந்தது. யுத்த வெற்றி, சிங்கள-பௌத்த மக்களின் மாவீரனாக மஹிந்தவை ஆக்கிய பின்னர், அரசியலில் தப்பிப் பிழைப்பதற்காக தனது பாதையை மாற்ற வேண்டிய தேவை, ஜே.வி.பிக்கு ஏற்பட்டது. அவர்கள், அநுர குமார தலைமையில் தாராளவாத முகமூடியை அணிந்துகொண்டார்கள். நிற்க!

அண்மையில், தனது முதலாவது சிம்மாசன உரையில், ஜனாதிபதி ரணில் சொன்ன ஒரு விடயம் கவனிக்கத்தக்கது. “நான் அரசியலில் பிரவேசித்த காலத்திலிருந்தே, இன, மத, மொழி, சாதி பிரிவினைகள் இல்லாத இலங்கை அடையாளத்துடன் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்பினேன். ஒரு தாயின் குழந்தைகள், ஒற்றுமையாக வாழக்கூடிய தேசத்தை உருவாக்க வேண்டும். இந்தச் செயற்பாட்டில் நான் தொடர்ந்து ஈடுபட்டதால், அரசியல் தோல்விகளைச் சந்தித்தேன். இது தீவிர கொள்கை உடையவர்களால் விமர்சிக்கப்பட்டது. இனவெறி மற்றும் மதவெறிக்கு எதிரான எனது தொடர்ச்சியான நிலைப்பாட்டின் காரணமாக, சில அரசியல் கட்சிகள் என்னை இனவாதி என்று அவதூறு செய்தன. எனினும், எனது கொள்கையிலிருந்து நான் விலகவில்லை. அந்தக் கொள்கையில் இருந்து நான் விலக மாட்டேன்” என்று ஜனாதிபதி ரணில் கூறியிருந்தார்.

இது பட்டவர்த்தனமான உண்மையும் கூட! ரணில் மீது பல விமர்சனங்களைப், பலரும் முன்வைக்கலாம். ஆனால், ரணில் இனவாதியல்ல; அரசியல் இலாபத்துக்காக இனவாதத்தைப் பயன்படுத்திக்கொண்டவரும் அல்ல. ரணில் மீது அநேக தமிழர்கள், முஸ்லிம்கள், உள்ளிட்ட சிறுபான்மையினரிடம் ஒருவகை நல்லெண்ணம் உள்ளமைக்கு இதுதான் காரணம்.

அரசியல் காய்நகர்த்தல்களில் ரணில், தனது மாமா ஜே.ஆரைப் போல ‘நரி’யாக இருக்கலாம், ஆனால், ஜே.ஆரைப் போல, ரணில் இனவாதத்தை அரசியலுக்கு பயன்படுத்தியவர் அல்ல. இனவாதம் பேசினால், பெரும்பான்மை சிங்கள-பௌத்த வாக்குவங்கியைக் கவரலாம் என்ற போதிலும் கூட, அதைச் செய்யாதவர் ரணில்.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி இருக்கும் இன்றைய சூழல், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அரசியல் தீர்வொன்றுக்கான முன்னகர்த்தலை முயற்சிக்கக்கூடிய அரிய தருணம்.

இதன் அர்த்தம், தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளும், ரணில் விக்கிரமசிங்கவால் ஒரு நாளில் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதல்ல; மாறாக, கோட்டா வந்த போது வாய்ப்பே இல்லையென்று ஆகிப்போன தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில், தற்போது அதிகரிப்புவாத (incrementalism) அடிப்படைகளில், அடுத்த கட்ட நகர்வுகளைச் செய்யக் கூடிய சாத்தியம் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது.

ஒன்றிரண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தற்போது ரணில் விக்கிரமசிங்கவோடு ஏற்படுத்திக்கொண்டுள்ள தனிப்பட்ட முரண்பாடுகள் காரணமாக, இந்த வாய்ப்பை தட்டிக் கழித்துவிடக்கூடாது என்பதுதான், இங்கு கோடிட்டுக்காட்டப்பட வேண்டியதாக இருக்கிறது.

இலங்கை இன்று கண்டுள்ள பொருளாதார வங்குரோத்து நிலை, சிங்கள-பௌத்த பேரினவாதம் தொடர்பில், ஒரு துளி எதிர்மறையான எண்ணத்தை, சிங்கள-பௌத்த மக்களிடையே ஏற்படுத்தி இருக்கிறது. சுதந்திர இலங்கை எடுத்துக்கொண்ட அரசியல் பாதை தவறு என்பதையும், சிறுபான்மையினர் நடத்தப்பட்ட விதம் பிழை என்பதையும் பலரும் உணர்வதாகத் தெரிகிறது.

இந்த நேரத்தில், சிங்கள-பௌத்த பேரினவாதத்தை தனது, அரசியல் மூலதனமாகக் கொண்டிராத ஒருவர் ஜனாதிபதியாக இருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ் மக்கள் எதைப் பெற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்பது, தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் திறமையிலும் இராஜதந்திரத்திலுமே தங்கியிருக்கிறது.

ரணிலை எதிர்ப்பது என்பது இலகுவான தெரிவு. அதனால், தமிழ் மக்களுக்குப் பலனேதுமில்லை. ஆனால், ஜனாதிபதி ரணிலோடு, அரசியல்ரீதியாக ஈடுபடுவதன் ஊடாக, தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் ஏதேனுமோர் அடைவையேனும் பெற்றுக்கொள்ள முடியுமென்றால், அது ஒரு பலனுமில்லாத எதிர்ப்பைவிட, நன்மையானதே.

தமது தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளை விடுத்து, இதைச் ‘சாத்தியமான அரசியல்’ பற்றிப் பேசும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாவது செய்வார்களா என்பதே, இங்கு கேள்வி. ‘வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக நினைப்பானை நீங்கும் திரு’ என்ற வள்ளுவன் வாக்கை, தமிழ் மக்கள், தமது பிரதிநிதிகள் தொடர்பில் சிந்தனையில் கொள்ள வேண்டும்.

சென்னை

அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான வழக்கு

# புது நீதிபதியின் முன் இன்று விசாரணை

அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க.) பொதுக்குழு தொடர்பான வழக்கை வேறு நீதிபதியிடம் விசாரணைக்கு பட்டியலிட வேண்டுமென ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் தலைமை நீதிபதியிடம் முறையிடப்பட்டது. இதற்கு இந்த வழக்கை விசாரிக்க இருந்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி கடும் கண்டனம் தெரிவித்து இருந்தார்.



இந்த நிலையில் இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கை வேறு நீதிபதி விசாரணைக்கு பட்டியலிடுவது குறித்து முடிவு செய்ய இந்த வழக்கை தலைமை நீதிபதிக்கு நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி பரிந்துரை செய்தார்.

இந்த பரிந்துரையை பரிசீலித்த தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி, இந்த வழக்கை நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் விசாரிக்க உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கை 2 வாரத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த வழக்கு இன்று (8)திங்கட்கிழமை) நீதிபதி ஜெயச்சந்திரன் முன்பு விசாரணைக்கு வருகிறது.

கொப்பல்



## முஸ்லிம் குடும்பமும் பூஜை கொண்டாடியது

கர்நாடகத்தில் வரமகாலட்சுமி பண்டிகை கொண்டாடப்பட்டது. இதையொட்டி மாநிலத்தில் உள்ள மகாலட்சுமி கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடந்தது. இந்துக்கள் பண்டிகை என்று கூறப்படும் வரமகாலட்சுமி பண்டிகையை ஒரு முஸ்லிம் குடும்பமும் கொண்டாடி உள்ளது.

கொப்பல் தாலுகா அவலந்தி என்ற கிராமத்தை சேர்ந்தவர் நஜ்ருதீன். குடும்பத்தினருடன் சேர்ந்து தனது வீட்டில் வரமகாலட்சுமி பண்டிகை கொண்டாடினார். அதாவது மகாலட்சுமியின் சிலையை அலங்கரித்து அவர் பூஜைகள் செய்து வழிபட்டார். மேலும் உணவுகள் தயாரித்து அக்கம்பக்கத்தினருக்கு வழங்கினார். இதுகுறித்து நஜ்ருதீன் கூறும்போது, கடந்த 3 ஆண்டுகளாக எனது குடும்பத்தினருடன் சேர்ந்து வரமகாலட்சுமி பண்டிகையை கொண்டாடி வருகிறேன். இது மகிழ்ச்சி அளிக்கிறது. கிராமத்தில் நடக்கும் இந்து பண்டிகைகளிலும் கலந்து கொள்கிறேன் என்றார்.

இம்பால்

மணிப்பூரில் 5 நாள்களுக்கு

## இணைய,தொலைபேசி சேவைகள் முடக்கம்



மணிப்பூர் முழுவதும் 5 நாள்களுக்கு மொபைல் போன், இணையதள சேவைகள் முடக்கப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது.

சில சமூக விரோதிகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பொதுமக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் வெறுப்புப் பேச்சுகளை பரப்புகின்றனர். இதன் காரணமாக இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்த 4 நபர்களால் வாகனம் ஒன்று எரிக்கப்பட்டது. இந்தக் குற்றச்செயல் காரணமாக அங்கு பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. வகுப்புவாத கலவரம் மற்றும் வன்முறை சம்பவங்கள் நிகழலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

திருமணமாகாத பெண்ணுக்கும்

## கருக்கலைப்புச் சட்டத்தின் கீழ் உரிமை வழங்க வேண்டும்

புதுடெல்லியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது ஆண் நண்பருடன் ஒருமித்த சம்மதத்துடன் இருந்த உறவின் பேரில் கர்ப்பமடைந்துள்ளார். அவர் கர்ப்பத்தைக் கலைக்க அனுமதி கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். திருமணமாகாதவர் என்ற காரணத்தை சுட்டிக் காட்டி அவருக்கு கருக்கலைப்பு செய்ய மருத்துவர்கள் மறுத்துவிட்டனர். கருவை கலைக்க உயர்நீதிமன்றமும் அனுமதி மறுத்துவிட்டது.



இதுதொடர்பான மேல்முறையீட்டு வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட், ஏ.எஸ்.போபண்ணா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, திருமணமாகாத பெண்ணுக்கும் கருக்கலைப்பு உரிமை உண்டு என்று நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர்.

இதுதொடர்பாக நீதிபதிகள் கூறும்போது, “ஒரு பெண்ணின் இனப்பெருக்கத் தேர்வு உரிமை என்பது அரசியலமைப்பு சட்டத்தின் தனிப்பட்ட உரிமையாகும். விவாகரத்து பெற்றவர்கள், கணவனை இழந்தவர்கள் மற்றும் திருமணமாகாத பெண்களும் தங்கள் 24 வார கருவைக் கலைக்க அனுமதிக்கும் விதத்தில் சட்டம் உருவாக்க வேண்டும்” என்றனர்.

பாட்னா

## தேடித் தேடி வந்து கொத்திய பாம்பு



பீகார் மாநிலம் பவானிபூரில் பாம்பு கடித்து இறந்த தனது அண்ணனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த தம்பியும் பாம்பு கடித்து இறந்த சோகம் ஏற்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் பவானிபூர் கிராமத்தை சேர்ந்தவர் அரவிந்த் மிஸ்ரா (38). இவர் பாம்பு கடித்து உயிரிழந்துள்ளார். இவரது இறுதி சடங்குகளில் கலந்து கொள்ள கோவிந்த் மிஷாரா (22) வந்துள்ளார். இரவில் இவர் தூங்கிக் கொண்டிருந்த போது, இவரைப் பாம்பு கடித்தது. இதனால் இவரும் உயிரிழந்தார். அத்துடன் அதே வீட்டில் இருந்த உறவினர்களில் ஒருவரான சந்திரசேகர் பாண்டேவையும் (22) பாம்பு கடித்துள்ளது.

இதையடுத்து பாண்டே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அரவிந்த் மிஷாராவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வந்த கோவிந்த் மிஸ்ரா, சந்திரசேகர் பாண்டே ஆகிய இருவரும் பஞ்சாப் லூதியானாவில் இருந்து வந்தனர்.

சேலம்

## பாட்டியிடம் முத்த நிந்தனை

### பாட்டி மருத்துவமனையில்

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே உள்ள மோரூர் பகுதியைச் சேர்ந்தவர் கூலித் தொழிலாளியான இளைஞன் மதுபோதையில் இருந்தபோது, அதே பகுதியைச் சேர்ந்த மூதாட்டியிடம் முத்தம் கேட்டுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மூதாட்டி, அவரிடம் சண்டை போட்டுள்ளார். ஆனால், கேட்டது கிடைக்காத விரக்தியில் மதுபோதையில் இருந்த இளைஞன் அருகில் இருந்த இரும்புக் கம்பியை எடுத்து மூதாட்டியை சரமாரியாக தாக்கியுள்ளார்.

இதனால் கூச்சலிட்ட மூதாட்டியைப் பார்த்து அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கோட்டை ரயில் நிலையத்துக்கு

# ஃபெஷன் பக் இனால் புதுப்பொலிவு




ஃபெஷன் பக், கோட்டை ரயில் நிலையத்தின் அழகியல் தோற்றத்தை மேம்படுத்தும் ஒரு மறுசீரமைப்பு செயற்றிட்டத்தை அண்மையில் முன்னெடுத்துள்ளது. இச்செயற்றிட்டத்தின் பெரும்பகுதி பயணிகளுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதற்காக, ரயில் நிலைய வளாகத்திற்கான சிறந்த மற்றும் தெளிவான அடையாளங்கள், நேர அட்டவணைகள் மற்றும் பெயர் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.

கொழும்பின் மையப் பகுதியில் உள்ள போக்குவரத்து தனித்துவ சின்னங்களில் ஒன்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் முக்கிய தேவையைப் புரிந்துகொண்டு, ஃபெஷன் பக், கடந்த 10 வருடங்களாக கோட்டை ரயில் நிலையத்தில் உள்ள முக்கிய அடையாள பலகைகளின் பராமரிப்பை தொடர்ந்து கவனித்து வருவதுடன், ரயில் நிலையத்தின் முக்கிய பாகங்களுக்கு தொடர்ச்சியான மேம்பாட்டு ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வந்துள்ளது.

“வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு என்பது ஃபெஷன் பக் நிறுவனத்தின் விழுமிய கட்டமைப்பின் அத்திவாரமாகும். மேலும், இந்தச் செயற்றிட்டமானது கடந்த 10 வருடங்களாக நாம் தொடர்ச்சியாகவும் இடைவிடாத வகையிலும் செய்துவரும் ஒன்றாகும்” என ஃபெஷன் பக் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் தினேஷ் ஏகநாயக்க தெரிவித்தார்.

ஃபெஷன் பக் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி திருமதி நதிஷா விக்கிரமதிலக்க இது தொடர்பில் மேலும் கூறுகையில், “கோட்டை ரயில் நிலையம், உண்மையிலேயே கொழும்பின் போக்குவரத்து கட்டமைப்பின் ஒரு தனித்துவச் சின்னமாகும். இந்தப் புனரமைப்புத் திட்டமும் ஃபெஷன் பக் நிறுவனமும், 2013 ஆம் ஆண்டில் நாங்கள் முதன்முதலில் இந்த முயற்சியை ஆரம்பித்த காலகட்டத்திலிருந்தே நீண்ட கால வரலாற்றைக் கொண்டவை” என்று குறிப்பிட்டார்.

அறிவிப்பு பலகைகள், ரயில்வே நடைபாதை இலக்கங்கள், நேர அட்டவணைகள், டிக்கெட் கருமபீட பலகைகள், வரைபடங்கள் மற்றும் தினசரி பயணிகளுக்கு உதவும் ஏனைய பெயர் மற்றும் திசை வழிகாட்டல் பலகைகளை நிறுவி, பேணிப் பராமரிக்கும் பொறுப்பை ஃபெஷன் பக் பொறுப்பேற்றுக்கொண்டது. நிலையத்தை புதுப்பொலிவுடன் மேம்படுத்துவதற்காக மொத்தத்தில், சுமார் 150 பலகைகள் நிறுவப்பட்டுள்ளன.

நிறுவனம் பல புனரமைப்பு செயற்றிட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது, குறிப்பாக களுபோவிலை வைத்தியசாலை, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு கண் வைத்தியசாலை ஆகியவற்றில் உள்ள பல சிகிச்சை விடுதிகளின் புனரமைப்பு செயற்றிட்டங்களும் இதில் அடங்கும்.

# பைரஹா இணையத்தளம் புதுப்பிப்பு

பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சி, தனது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தையும், இலகுவான சேவையையும் வழங்குவதற்காக தனது இணையத்தளத்தை அண்மையில் மீள்வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளது. கேள்வி அதிகரித்துள்ள நிலையில், தங்குதடையின்றிய இணைய வழி கொள்வனவு அனுபவத்தை வழங்குவதற்காகவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கோழி இறைச்சி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளை கொள்வனவு செய்யும் குடும்பங்கள், நிறுவனங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களின் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்துடன் நிறுவனம் சீரான அடிப்படையில் உள்நாட்டு சந்தைப் பங்கைப் பேணி வரும் அதேவேளையில், அதன் இணையத்தளத்தை மறுசீரமைப்பதற்கான இந்த நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமின்றி வாடிக்கையாளர்களுக்கு இணைய உலாவல் மற்றும் கொள்வனவு செயல்முறையை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலமாக அவர்கள் கோழி இறைச்சி மற்றும் தொடர்புபட்ட ஏனைய தயாரிப்புக்களை இணையத்தின் வழியாக எளிதாக கொள்வனவு செய்ய முடியும்.

“நாட்டின் தற்போதைய சூழ்நிலையை நாங்கள் விரைவாக உணர்ந்து எம்மை மாற்றியமைத்தோம். அதிகரித்து வரும் எண்ணிக்கையில் நுகர்வோர் இணைய வழிமுறைகளைப் பயன்படுத்தி விரைவாக கொள்வனவு செய்ய விரும்புவதால், பயனர்களுக்கு ஏற்றதாக மட்டுமல்லாமல், அனைத்து சாதனங்களுக்கும் இணக்கமான ஒரு நுழைமுகத்தை உருவாக்க விரும்பினோம். அதே நேரத்தில் போதிய தகவல் விவரங்களை வழங்குவதுடன், மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்க முற்படும் ஒன்றாக அது அமைய வேண்டும் என்றும் விரும்பினோம்” என பைரஹா ஃபாம்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான யாக்கூத் நளீம் கருத்து வெளியிட்டார்.

வாடிக்கையாளர்கள் இப்போது தங்கள் சொந்த கணக்கை உருவாக்கி, தங்கள் கொள்வனவு செய்ய விரும்புகின்ற தயாரிப்புகளை இணைய கொள்வனவுக் கூடையில் சேர்க்கலாம். இவ்வாறு அவர்கள் தெரிவு செய்த தயாரிப்புகள் அவர்களின் வீட்டுக்கே ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நேரடியாக விநியோகம் செய்யப்படும். பைரஹாவின் உயர் ரக தெரிவான சமைக்காத, தோல் நீக்கப்பட்ட, மசாலா சேர்த்து ஊற வைக்கப்பட்ட, சமைத்த மற்றும் முன்கூட்டியே சமைத்த மதிப்பு கூட்டப்பட்ட கோழி இறைச்சி தயாரிப்புகள் மற்றும் Cheese Nuggets, Munch மற்றும் Skewers போன்ற பிற பிரபலமான தயாரிப்புகளை வாடிக்கையாளர்கள் சுதந்திரமாக இணையத்தின் மூலமாக தெரிவு செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

“எமது வர்த்தகநாமமானது 47 வருடங்களாக எமது நுகர்வோருக்கு உயர்தர தயாரிப்புகளை வழங்குவதில் நம்பகமான பெயரைச் சம்பாதித்துள்ளது. மேலும், நாம் தற்போது உள்நாட்டு சந்தையில் பல வழிமுறைகள் மூலமாக எமது தயாரிப்புக்களை வழங்கி வருகிறோம். மறுசீரமைக்கப்பட்ட இணையத்தளத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம், இந்த இணையதள நுழைமுகமானது வெளிநாடுகளில் இருந்தும் வாடிக்கையாளர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் என்றும் மற்றும் சமூகத்தின் அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் பயனளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்று பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறை தலைமை அதிகாரியான குமரினி கந்தப்பா குறிப்பிட்டார்.

பிரத்தியேக கோழி இறைச்சி சமையல் குறிப்புகள், சமையல் உதவிக் குறிப்புகள், அத்துடன் அறிவுபூர்வமான கலந்துரையாடல்கள், கோழி உற்பத்தி மற்றும் நுகர்வு பற்றிய வலைப்பதிவுகள் மற்றும் கோழி இறைச்சி தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இணையதளத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் எளிதாகவும், ஆழமாகவும் விவரமான உள்ளடக்கத்தைப் பெறலாம்.

தாய்வான்

# தாக்குதல் நடத்த தயாராகும் சீனா?

தங்கள் நாட்டின் மீது சீனா தாக்குதல் மேற்கொள்ளத் தயாராகியுள்ளதாக தாய்வான் அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

தென்கிழக்கு ஆசிய பகுதியில் சீனா தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்குத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக தாய்வானை சீனாவின் ஓர் அங்கமாகவும், அது தனி பிராந்தியம் இல்லை என்ற நிலைப்பாட்டையும் சீனா தொடர்ந்து உலக அரங்கில் நிரூபித்துக்கொண்டே இருக்கின்றது.

அதேசமயத்தில் தாய்வான் பகுதியின் தன்னாட்சி உரிமையை அமெரிக்கா துணை நின்று பாதுகாக்கும் என அமெரிக்க அரசு தொடர்ந்து கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், தற்போது தாய்வான் எல்லை அருகே சீனா தனது இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பாக தாய்வானின் எல்லைப்பகுதி அருகே சீன இராணுவம் அதிநவீன ஏவுகணைகளை வீசி போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தாய்வான் குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும் தாய்வானின் முக்கிய தீவுகளில் ஒன்றின் மீது தாக்குதல் நடத்த சீனா தயாராகிவிட்டது எனவும், சீனாவின் பல்வேறு போர்க்கப்பல்களும், இராணுவ விமானங்களும் தங்கள் எல்லைக்குள் நுழைந்திருப்பதாகவும் தாய்வான் அரசு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான்

## ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு:
## 8 பேர் உயிரிழப்பு; 20 பேர் காயம்

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் ஷியா முஸ்லிம் பிரிவினர் அதிகம் வசிக்கும் பகுதியில் நேற்று முன்தினம் (06) பயங்கரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 20 க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இக் குண்டு வெடிப்புக்கு சன்னி முஸ்லிம் பிரிவை சேர்ந்த ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஷியா பிரிவினருக்கும் சன்னி பிரிவினருக்கும் இடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈக்குவெடோர்

## கணவரின் சிறுவயது புகைப்படத்தை பார்த்து
## அதிர்ச்சியில் உறைந்த மனைவி



ஈக்குவடோர் நாட்டைச் சேர்ந்தவர் ஜலிஸ் மெலினா. 26 வயதான இவர், சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்,பெட்ரோ பப்லோ என்ற தனது காதலரைத் திருமணம் செய்து கொண்டார்.

இவர்கள் இருவரும் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், ஒருவருக்கு ஒருவர் காதலித்து வந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தனது மாமியார் வீட்டில் இருந்த புகைப்பட அல்பம் ஒன்றை தற்செயலாகப் பார்த்த ஜலிஸ், சுமார் 15 வருடங்களுக்கு முன்பு, கணவரின் சிறு வயது புகைப்படம் ஒன்றில், அவரின் பின்னால், தான் நிற்பதைக் கண்டு இன்ப அதிர்ச்சியடைந்துள்ளார்.

ஒரு வீதியில் வைத்து இப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், கெமராவைப் பார்த்த படி, பெட்ரோ நிற்க, அவரை எதேச்சையாக மஞ்சள் நிற உடை அணிந்த ஜலிஸ் பார்ப்பது போன்று அப்புகைப்படம் உள்ளது.

இந்நிலையில் இது குறித்து சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ள ஜலிஸ் "நாங்கள் இருவரும் சேர வேண்டும் என்பது எங்களது சிறுவயதிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

## நாக்கை உண்ணும் விசித்திர ஒட்டுண்ணி

பிரித்தானியாவில் மீனின் வாய்க்குள் புகுந்து நாக்கை உண்ணும் வித்தியாசமான ஒட்டுண்ணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் சபோல்க் என்னும் நகரில், இறக்குமதி செய்யப்பட்ட மீன்களில் ஒரு மீனின் வாய் பகுதி மாத்திரம் வித்தியாசமாக இருந்துள்ளது.

இதனையடுத்து குறித்த மீனானது அதிகாரிகளால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது அம்மீனின் வாய் பகுதியில் நாக்கு இருக்கும் இடத்தில் 'சிமோதோவா எக்சிகுவா' என்ற பெயர் கொண்ட ஓர் ஒட்டுண்ணி இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ் ஒட்டுண்ணியானது மீனின் சுவாச பகுதியினுள் சென்று



வாய்க்குள் புகுந்துள்ளது எனவும், அதன் பின்னர் மீனின் நாக்கை உண்டு அதன் மீதி பகுதியில் இருந்து கொண்டு புதிய நாக்காகவே உருமாறியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கலிபோர்னியாவிலும் இந்த ஒட்டுண்ணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த ஒட்டுண்ணியால் மனிதர்களுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

## மீண்டும் களம் இறங்கும் இம்ரான்கான்?

பாகிஸ்தானின் இம்ரான்கான் ஆட்சி வீழ்த்தப்பட்ட போது, அவரது பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் 131 எம்.பிக்கள் தங்கள் பதவியை இராஜினாமா செய்தனர். அவர்களில் 11 பேரின் இராஜினாமாவை நாடாளுமன்ற சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளார். இந்த 11 தொகுதிகளில் 9 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 25ஆம் திகதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 தொகுதிகள் பெண்களுக்கானவை. 9 தொகுதிகளில் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் சார்பில் கட்சித்தலைவர் இம்ரான்கான் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அந்தக் கட்சியின் துணைத்தலைவர் பவாத் சவுத்ரி உறுதி செய்துள்ளார். இங்கு 9 தொகுதிகளில் இம்ரான்கான் போட்டியிடப்போவதாக அறிவித்திருப்பது, பலரையும் திடுக்கிட வைத்துள்ளது.

பிரித்தானியா

## 80 வருடங்களுக்கு முன்பாக
## ஹிட்லர் இறப்பை சொன்ன குறிப்பு?

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் நீரில் மூழ்கிய கப்பல் ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடால்ப் ஹிட்லரின் நாஜிப் படைகள் பயன்படுத்திய 'U boat 534' எனப்படும் குறித்த கப்பலானது, நாஜிப்படைகள் தென் அமெரிக்காவிற்கு தப்பி செல்ல பயன்படுத்தியது எனவும், 1945 ஆம் ஆண்டு நாஜிப் படைகள் இதனைப் பயன்படுத்திய போது அது நீரில் மூழ்கியது எனவும் கூறப்படுகிறது.



எனினும் கடந்த 1993 ஆம் ஆண்டு, பிரித்தானியாவில் இக் கப்பல் கண்டெடுக்கப்பட்டது எனவும், இத்தனை ஆண்டுகளாக இது மிகவும் பாதுகாக்கப்பட்டு வந்ததாகவும், இதனைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# தொடரை கைப்பற்றியது இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், லௌடர்ஹில்லில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நான்காவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரை இந்தியா கைப்பற்றி 3-1 என அசைக்க முடியாத முன்னிலையிலுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இந்தியா: 191/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரிஷப் பண்ட் 44 (31), றோஹித் ஷர்மா 33 (16), சஞ்சு சாம்ஸன் ஆ.இ 30 (23), சூரியகுமார் யாதவ் 24 (14), தீபக் ஹூடா 21 (19), அக்ஸர் பட்டேல் ஆ.இ 20 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 2/29 [4], அகீல் ஹொஸைன் 1/28 [4], டொமினிக் ட்ரேக்ஸ் 0/31 [4]) மே. தீவுகள்: 132/10 (19.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் 24 (08), றொவ்மன் பவல் 24 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங் 3/12 [3.1], ஆவேஷ் கான் 2/17 [4], ரவி பிஷ்னோய் 2/27 [4], புவ்னேஷ்வர் குமார் 0/21 [3], தீபக் ஹூடா 0/4 [1])

போட்டியின் நாயகன்: ஆவேஷ் கான்



இங்கிலாந்து பிறிமியர் லீக்:

## சமநிலையில் லிவர்பூல் புல்ஹாம் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், புல்ஹாமின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், லிவர்பூலுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

புல்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் அலெக்ஸான்டர் மிற்றோவிச் பெற்றதோடு, லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா, டர்வின் நுனேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளைம் எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றிருந்தது. செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோர்ஜினோ பெற்றிருந்தார்.

Dialog SCHOOLS RUGBY

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

## வெஸ்லியை வென்ற றோயல்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்கில், லொங்டன் பிளேஸில் அண்மையில் நடைபெற்ற வெஸ்லிக் கல்லூரியுடனான போட்டியில் 21-16 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றிருந்தது.

றோயல் சார்பாக, டனுஜா சமரரத்ன மூன்று ட்ரைகளைப் பெற்றதோடு, நபீல் யஹியா மூன்று கொன்வேர்ஷன்களைப் பெற்றிருந்தார். வெஸ்லி சார்பாக ஜயவர்தன ஒரு ட்ரையைப் பெற்றதோடு, கொன்வேர்ஷனையும் பெற்றிருந்தார்.

மருதமுனையில் மின்னொளி சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி:

## சமநிலையில் ஒலிம்பிக் – ஈஸ்டர்ன் யூத் போட்டி

ஏ.எல்.எம். ஷினாஸ்





மருதமுனை ஈஸ்டர்ன் யூத் விளையாட்டுக் கழகம், அதன் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டிகள் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்ற நிலையில், அண்மையில் நடைபெற்ற ஈஸ்டர்ன் யூத் விளையாட்டுக் கழகம், மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகதுக்கிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஈஸ்டர்ன் யூத் விளையாட்டுக் கழகம் சார்பாகப் பெறப்பட்ட கோலை எம். ரோஷான் பெற்றதோடு, ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஏ.ஆர்.எம். றாஷிம் பெற்றிருந்தார்.

இந்த போட்டிகளில் அம்பாறை மாவட்டத்தின் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களான ஈஸ்டர்ன் யூத், ஒலிம்பிக், கோல்ட் மைன்ட், சனிமௌண்ட், யுனைட்டட், பிர்லியன்ட், கிறீன் மெக்ஸ், எவரெடி ஆகிய விளையாட்டு கழகங்கள் ஒன்றை ஒன்று எதிர்த்து விளையாடவுள்ளன. போட்டிகளில் வெற்றி பெறும் கழகங்களுக்கு அந்தந்த போட்டி நடைபெறும் தினத்திலேயே பரிசளிப்பு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. மின்சாரம் அமுலில் உள்ள காலப்பகுதியில் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இந்த போட்டிகள் மசூர்மௌலானா விளையாட்டு மைதானத்தில் இரவு 9.00 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 08 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.